DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 3/2023

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW3

| | | |
|---|---|---|
| Name | : | **தவமணி** |
| Husband Name | : | மணிகண்டன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| Calling | : | பதிவுறு எழுத்தர், |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2026.

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டம், பெரியபட்டினம் குரூப் சர்வே எண்.53/5 சொத்துக்கு 1956ம் ஆண்டு முதல் 1986க்கு முன்பு வரை உள்ள செட்டில்மென்ட் அ பதிவேடு நகல்களை தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிட்டதின்பேரில் 1957ம் ஆண்டுக்குரிய செட்டில்மென்ட் அ பதிவேட்டை தாக்கல் செய்கிறேன். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மைநகல் **சா.சா.ஆ.3**.

**1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சர்வே எண்.53/5 சர்வே எண்.53/2 லிருநது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.53/3, 53/4 சர்வே எண்.53/2 லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 53/3 சர்கார் பாதையாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.53/3 பாதை சர்வே எண்.53/2 க்கும் சர்வே எண்.53/5 க்கும் இடையில் தென்வடல் பாதையாக உள்ளது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி:–**

UDR க்கு முன்பு ஒருநபர் ஒரு சர்வே எண்ணில் பகுதி சொத்தில் கிரையம் வாங்கினால் உட்பிரிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு உட்பிரிவு செய்யப்பட்ட எண் சேர்க்கப்பட்டு செட்டில்மென்ட் அ பதிவேடு நகலில் ஏற்றப்படும் என்றால் சரிதான்.

**2 முதல் 4, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.